ரூ. 21,000 ஆக உயர்த்தியுள்ளார்கள். அதைப்போல ஊனமுற்றால் ரூ. 7,500 என்று இருந்ததை 10,500 ஆக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறார்கள். அதைப்போல மீனவர்கள் தொழில் செய்யாத காலங்களில், அதாவது வறட்சிக் காலங்களில் மாதம் ரூ. 60 பெற்று வந்தார்கள். அதை தற்போது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாதந்தோறும் ரூ. 270 ஆக உயர்த்தி கருணை உள்ளத்தோடு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு க. குப்பன்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுகிற மீனவ சமுதாய மக்கள் இளமைக் காலங்களில் தொழில் செய்வதுபோல, 50 வயதிற்குமேலே தொழிலிலே ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்படுவதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கின்ற உறுப்பினர்களுக்கு இந்த அரசு ஓய்வூதியம் கொடுக்கின்ற வகையிலே செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் ஓய்வூதியம் பெற விரும்பினால் அவர்களாகவே ஜீவன்தாரா என்ற இந்திய ஆயுள்காப்பீட்டுக் கழகத் திட்டத்தின்கீழ் சேர்ந்து, அதற்கான பிரிமியத்தைச் செலுத்த ஏற்பாடு செய்துகொள்ளலாம். மாறாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், தற்போது நிதி ஆதாரம் இடம் தராத நிலையில் இருப்பதால், இது பற்றி புரட்சித் தலைவி அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 278, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

278—

செங்கம் தொகுதியில் சோப்பு தொழிற்சாலை.

*4166—டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1992 மார்ச் 19

(அ) செங்கம் தொகுதியில் ஜவ்வாது மலையிலுள்ள சந்தனத் தோப்புகளை மூலப்பொருளாக வைத்து சோப்புத்தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கம் தொகுதியில் சோப்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ள செங்கத்தில், நறுமணம் வீசுகின்ற சந்தன மரத்தை மூலப்பொருளாகக் கொண்டு சந்தன சோப்பு தயாரித்தால், மைசூர் சேண்டல் சோப்புக்கு இணையாக வருவாய் பெற தமிழக அரசுக்கு வாய்ப்பு உள்ளதால், அரசு இந்தத் திட்டத்தில் தீவிர கவனம் செலுத்த முன்வருமா, மீண்டும் இந்தத் திட்டத்தைப் பரிசிலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோப்புத் தொழிற்சாலை அமைப்பது என்னும் போது, அது சந்தனக் கட்டை கிடைப்பதைப் பொறுத்து அமைவதல்ல. குளியல் சோப்புக்கு சந்தன எண்ணெய் சிறிதளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இது போன்று சோப்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் வைப்பார்களானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 272, திரு பி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்,

272—

குரவபுலத்தில் கிராமக் கூட்டுறவு வங்கி.

*5147 திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேதாரண்யம் தொகுதி குரவபுலத்தில் கிராமக் கூட்டுறவு வங்கி துவங்க அரசு ஆவன செய்யுமா ?